# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 40 /2022 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. மஸ்தான்கனி |
| Father’s/Husband Name | | திரு. சாகுல்ஹமீது |
| Village | | அதிராம்பட்டிணம் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 29/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of August 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அதிராம்பட்டிணம் சால்ட்லைன் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மீன் மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு அதிராம்பட்டிணம் பாரி மளிகை கடையில் வேலை பார்த்து வந்தேன். இந்த வழக்கின் எதிரிகளான திருப்பதி , ஹரிகரன், விக்கி ஆகிய மூவரையும் தெரியும். நான் மளிகை கடையில் வேலைபார்க்கும் போது என் கடையில் பொருட்கள் வாங்குவார்கள் அந்த வகையில் பழக்கம். சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2019-ம் அன்று இரவு 8.45 மணியளவில் நான் என் மளிகை கடைக்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது யாரோ என்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள்.அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், நான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அப்போது

அதிராம்பட்டிண போலிசார் வந்தார்கள். அங்கு போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, படித்து பார்க்காமால் கையெழுத்து போட்டேன், என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கையெழுத்து மட்டும் என்னுடையது, அந்த கையெழுத்து **அசாஆ1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 30.08.2019 ந் தேதியில் இரவு சுமார் 8.45 மணியளவில் நான் கடையில் வேலை பார்த்துகொண்டிருந்தபோது எதிரிகள் திருப்பதி, ஹரிஹரன், விக்கி ஆகிய மூவரும் குடிபோதையில் வந்து கொசுவர்த்தி சுருள் கேட்டார்கள் என்றும் நான் கொஞ்சம் பொறுங்க நான் கஸ்டமருக்கு பொட்டலம் போட்டுவிட்டு தருகிறேன் என்று சொன்னதற்கு எதிரிகள் திருப்பதியும், ஹரிஹரனும் என்னை பார்த்து பொருள் தரபோறியா இல்லையா என மிரட்டினார்கள் என்றும் நான் கொஞ்சம் வெயிட் பண்ணுங்க என்று சொன்னபோது எதிரி ஹரிஹரன் அருகில் இருந்த பஞ்சிங் மிஷினை எடுத்து தேவடியா, குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக பேசி பொருள் கேட்டா தரமாட்டியா என்று எடைகல்லை தூக்கி என் முகத்தில் எரிந்தார் என்றும் அது என் மூக்கில் மீது பட்டு இரத்தம் வந்தது என்றும் எதிரிகள் திருப்பதியும் விக்கியும் கடைக்குள் வந்து சராமாறியாக என்னை கையால் அடித்தார்கள் என்றும் மேலும் எதிரி ஹரிஹரன் கடையில் இருந்த எடைக்கல்லை எனது வலது தோள்பட்டையில் அடித்தார் என்றும் பின்பு எதிரிகள் மூவரும் என்னை கடையிலிருந்து வெளியே இழுத்து ரோட்டில் வைத்து அடித்ததில் அங்கு நின்றுகொண்டிருந்த பைக்கில் மீது மோதிகீழே விழுந்துவிட்டேன் என்றும் மேலும் அதனால் என் தலை மற்றும் பின்புறபுரடி காயம் ஏற்பட்டது என்றும் மேலும் எதிரி விக்கி புல்லட்டில் வைத்திருந்த இரும்பு ராடால் என் நெற்றியில் அடித்தனர் என்றும் தலையில் அடிக்க வந்த போது அங்கிருந்தவர் தடுத்ததால் அந்த அடி என் மீது விழவில்லை. மேலும் எதிரிகள் மூவரும் என்னை பார்த்து நீ இன்னைக்கு தப்பித்துகிட்ட என்னைக்க

இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்றும் உன்னை கடையோடு வைத்து கொழுத்துவோம் என்று இல்லாவிடில் உன் வீடு எங்களுக்கு தெரியும் உன்னை வீட்டோடு வைத்து கொளுத்துவோம் என்று கொலைமிரட்டல்விடுத்து சென்றனர் என்றும் காயம் பட்ட என்னை எனது மாமா நிஜாமுதின் மற்றும் கடைமுதலாலி இருவருவம் அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு விசாரணைக்கு வந்த அதிராம்பட்டிண போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன் என்றும் அந்த புகார் மனு தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான் என்றும் அதன் அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை